
# “அநு. வை. நா.” வுக்கு வயது அறுபதா ?



இலக்கிய வித்தகர் —
சைவப் புலவர் —
அதிபர்,

## அநு. வை. நாகராஜன்

அவர்களின்

அறுபது வயது நிறைவை நினைந்திடும்

## மணிஏடு.

(07 . 09 . 1933 — 06 . 09 . 1993)

வெளியீடு : கலை இலக்கியக் களம் — தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அநு. வை. நா." வுக்கு வயது அறுபதா?

பொது சன நூலகம்
26 FEB 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

இலக்கிய வித்தகர் —
சைவப்புலவர் —
அதிபர்,

**அநு. வை. நாகராஜன்**
அவர்களின்
அறுபது வயது நிறைவை நினைந்திடும்
**'மணி' ஏடு**

**(07 - 09 - 1933 — 06 - 09 - 1993)**

வெளியீடு: கலை இலக்கியக் களம் — தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கியக் கள வெளியீடு - 03
நாள்: 12-09-1993

# இந்த ஏட்டினுள்ளே . . .

894.8114


பக்கம்

* வெளியீட்டுரை: — திருமதி கோகிலா மகேந்திரன் 03
* வாழ்த்துரை: — சிவத்தமிழ்ச் செல்வி, தங்கம்மா அப்பாக்குட்டி 06
* கன்னல் தமிழ் 'அநு வை நா' வாழீ — இயலிசை வாரிதி, - பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் 07
* பாராட்டுரை; — இலக்கண வித்தகர், இ. நமசிவாய தேசிகர், — தென்மயிலைச் சமாதான நீதவான் 08
* நன்மணிப் பாமாலை — சைவப்புலவர், சு. செல்லத்துரை 09
* நாணலென நிமிர்ந்து நிற்கும் படைப்பாளி — 'சிற்பி' — சி. சிவசரவணபவன் 11
* சிறுவர் இலக்கியம் — (1987 ... 88) — விரிவுரையாளர், திருமதி பாலராணி சண்முகராஜா 18
* பயண இலக்கியம் (1987—1988) — இலக்கிய வித்தகர், சைவப்புலவர், அநு வை. நாகராஜன் 28


மணிவிழா நிகழ்விடம்: யாழ் இணுவில் மத்திய கல்லூரி
(ஆரம்பப் பிரிவு மேன்மாடி மண்டபம்)
காலம்: 12-9-1993, காலை 9-00 மணி
நடத்துநர்: கலை இலக்கியக் களம் - தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

- இயல், இசை, நாடகம், சிற்பம், ஓவியம் சார்ந்த கலை நிகழ்வுகள் நடத்துதல்;
- இவை தொடர்பான கருத்தரங்குகள், ஆய்வுகள் நடத்துதல்;
- நூல்களை அறிமுகஞ் செய்தல்;
- குறித்த கலைஞர்கள் — படைப்பாளிகளுடன் செவ்வி காணல்;
- கள உறுப்பினர்களின் கலை — இலக்கிய ஆற்றலை மேம்படுத்துதல்; கௌரவித்தல்;
- களம் சார்ந்த பிரதேசக் கலை இலக்கிய வளங் களைப் பேணுதல், ஊக்குவித்தல்;
- இளந் தலைமுறையினரைக் கலை, இலக்கியத் துறையில் நெறிப்படுத்தி வளப்படுத்துதல்;
- கலை இலக்கியம் சார்ந்த நூல்களை வெளி யிடுதல்.

ஆகிய முக்கிய இலக்குகளை முன்வைத்துத் தெல்லிப் பழையில் 1986-09-05ம் நாளன்று—எமது கலை இலக்கியக் களத்தின் அமைப்பு, பன்னிரண்டு முன் னோடி ஆர்வலர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இப் பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்ட நடு மையக் குழுவே இக் களத்தை இயக்குகிறது.

கடந்த ஏழு வருடங்களாக, ஆடம்பரம் எதுவுமின்றி —தன்னடக்கத்துடன், தன் நோக்கங்களை முன்வைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துச் செயற்படும் இக் களம், இதுவரை முப்பத்தாறு ஒன்றுகூடலிற் சந்தித்துப் பல ஆக்கபூர்வமான செயல் களைப் புரிந்துள்ளது. இவற்றோடு நாடகத்துறையை முன்னிலைப்படுத்தி, மாணவர்களுக்குப் பயிற்சியளித்து ஆண்டுதோறும் வட இலங்கைச் சங்கீத சபையின் நாடகத் தேர்வுகளுக்குத் தேர்வுநாடிகளைத் தயார் செய்தும் வருகிறது, எமது களம்.

கடந்த காலங்களில், களம் செய்த பணிகளில் மிகவும் காத்திரமான பணி—1987 - 88களில் வெளியான ஈழத்துத் தமிழ் நூல்களை 'இருநாள்' ஆய்வரங்கில் (13-10-89, 14-10-89ல்) ஆய்வு செய்தமையைப் பெரு மையாகக் கொள்ளலாம். அத்தருணத்தில், ஆய்வா ளர்கள் பல்துறை சார்ந்த விடயங்களில் - தமது ஆய்வு களைக் கட்டுரைகளாகப் படித்தனர். இக் கட்டுரை களைத் தொகுத்து, கனதியான நூலாக வெளியிட நாம் உளங்கொண்ட போதிலும், நாட்டின் நெருக்கடி காரணமாக எமது எண்ணங் கைகூடவில்லை.

தகைசார்ந்த நூல்களை வெளியிடும் நோக்கம் எமக்கிருந்தமையால், இதுவரை இரண்டு நூல்களை வெளியீடு செய்தோம். அவற்றுள் — எமது கள இணைச் செயலரும், நாடகப் பிரிவுத் தலைவரு மான கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர் களின் மணிவிழாவை நினைந்து, 'அறுபது வயது இளைஞர் கலைப்பேரரசு' என்ற நூல் முதல் நூலாக அமைந்தது. அதனையடுத்து, களத்தின் அடுத்த இணைச் செயலரான எனது "தூவானம் கவனம்" என்ற நவீனம் 20-02-89ல் வெளியிடப்பெற்றது.

அத்தொடரில்,
எமது களத்தின் நிதியாளர், திரு. அநு. வை. நாக ராஜன் அவர்கள் மணிவிழாக் காணும் இத்தருணத் தில்—இந்நூல், களத்தின் மூன்றாவது வெளியீடாக வெளிவருகிறது.

பல்வேறு துறைகளிலும் கால்பதித்து, பல ஆக்கங் களை வழங்கிவரும் திரு. 'அநு. வை. நா.' அண்மை யில் வெளியான அவரது 'காட்டில் ஒரு வாரம்' என்ற சிறுவர் நவீனம் மூலம் அவரை நன்கு இனங் காணக்கூடியதாக இருந்தது. அவர், களத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியில் அதி அக்கறை கொண்டு உழைக்கும் ஓர் அற்புதமான மனிதர். மனிதநேயம் மிகுந்த படைப் பாளி. 'இவருக்கு வயது அறுபதா?' என வியக்க வைக்கும் நிலையில் துடிப்புடன் இயங்கும் இவரையும் இவர் பணிகளையும் உளமார நினைந்து, பாராட்டு கிறோம் – வாழ்த்துகிறோம்,

அந்த வகையில்—

இவர் பணிகளையும், உழைப்பையும் நினைவுறும் இவ்வேளையில் – இவர் பெயரில் வெளிவரும் இந்நூலில் இவர்பற்றி—'மல்லிகை' இதழில் மூத்த எழுத்தாளர் 'சிற்பி' அவர்கள் எழுதிய 'நாணலென நிமிர்ந்து நிற்கும் படைப்பாளி, 'அநு. வை. நாகராஜன்' என்ற எழுத்தோவியத்தை மறுபிரசுரஞ் செய்து மகிழ் கிறோம் அத்துடன், மேலே கூறிய எமது இருநாள் ஆய்வரங்கில் திருமதி பாலராணி சண்முகராஜா அவர்கள் வழங்கிய ''சிறுவர் இலக்கியம்'' பற்றிய ஆய்வுக்கட்டுரையையும், திரு. அநு. வை. நா.' அவர் கள் 'பல்துறை இலக்கியம்' என்ற தலைப்பில் வழங்கிய ஐந்து கட்டுரைகளில் ஒன்றான ''பயண இலக்கியம்' என்ற ஆய்வுக்கட்டுரையையும் தொகுத் துள்ளோம்

இதிலடங்கும் கட்டுரைகள்—வாசகர்களுக்குக் கனதி யும், காத்திரமும் கொண்டு, பயனுள்ளதாக அமையும் என நம்புகிறோம். மேலும், இவ் வெளியீட்டில் இவற்றை வெளியிட உதவியோருக்கும், எமது களம் என்றும் நன்றி உடையதாக இருக்கும்.

அத்துடன்

இந்நூலில்—திரு. 'அநு. வை. நா.' வின் மணிவிழாவை நினைந்து வாழ்த்தும், பாராட்டும் வழங்கிய பெரியார் களுக்கும் எமது நன்றி உரித்தாகும்.

எமது பணி மேலும் தொடர, கலை இலக்கியப் படைப்பாளிகள் சுவைஞர்கள் ஆர்வலர்கள் அனை வரதும் அன்பையும், ஆதரவையும், ஒத்துழைப்பையும் வேண்டி அமைகிறோம், ▭

கலை இலக்கியக் களம்,
தெல்லிப்பழை – இணுவில்.
20-08-1993

கோகிலா மகேந்திரன்
இணைச் செயலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—தெல்லிப்பழை துர்க்காதேவி
தேவஸ்தான முதல்வர்,
—'துர்க்கா துரந்தரி'
—'சிவத்தமிழ்ச் செல்வி',
– பண்டிதை,

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**

நவின்ற

# நல்வாழ்த்துரை

''வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு''

என்பது பொதுமறை

மணிநாயகராக எம்முன் காட்சிதரும் திரு. அநு வை. நாகராஜன் அவர்களின் உயர்வுக்கு இது மிகப் பொருத்தமானது.

இலட்சுமீகரம் என்பது, இவருடைய திருமுகத்தில் என்றுங் காணக்கூடியது. வார்த்தையிலே கலகலப்பும் கனதியுங்கொண்ட இவருக்கு வாய்த்த மனைவியோ, உண்மையிலேயே 'நேசபூபதி' தான்! பத்தாவுக்கேற்ற பதிவிரதை, என்று கூறின் மிகையாகாது.

எனவேதான் தெய்வ ஒளியும், சேவை ஒளியும் இவர் குடும்பச் சொத்தாகிவிட்டன.

'மனைக்கு விளக்கு, வாணுதலாள்' என்பரே! இவருடைய குடும்பம், இவ்விளக்கில் ஒளிவீசிப் பெருமை அடைகிறது என்பது முற்றிலும் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. 'அநு. வை. நா.' அவர்களை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே நான் அறிவேன். சைவப்புலவர் தேர்வுக்கு இவர் தோற்றியபொழுது, நான் பரீட்சகராகக் கடமையாற்றினேன். அநுராதபுரம் விவேகானந்த மகா வித்தியாலயத்தில் இவர் ஆசிரியராகக் கடமை ஆற்றியபோது, பாராட்டுக்குரிய பரிசு பெறுநராக இவரிருக்க, இவருக்குப் பரிசில் வழங்கும் பேறு ஒருமுறை எனக்குக் கிடைத்தது.

இவ்வாண்டு மணிவிழா நாயகராக விளங்கும் இப்பெரியாரின் உறுதிகொண்ட உள்ளமும், சமூக நலன் பேணும் சேவைகளும், உயர்ந்த தெய்வ பக்தியும், என்றும் என்னை வசீகரித்துக் கொண்டன. இதுவுமன்றி, இந்நாட்டுக் கல்விப்பரம்பரையில் இவர் ஒரு 'கலங்கரை விளக்கு' எனின், அது மிகையாகாது.

பல்துறை வல்லுநராக விளங்கும் இப்பெரியாரின் அறிவுநெறியும் தொண்டு நெறியும் மேன்மேலும் அனைவரையும் நெறிப்படுத்தட்டும் என வாழ்த்தி, ஆசி நல்கி அமைகிறேன். ▭

— தங்கம்மா அப்பாக்குட்டி

ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம்,
துர்க்காபுரம் தெல்லிப்பழை
25-08-93

---

உ

## கன்னல் தமிழ் 'அநு. வை. நா', வாழி!

வாழ்த்துநர்—
'இயலிசை வாரிதி', 'கவிமாமணி'
**பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்**
யாழ்ப்பாணம்—

*சின்னஞ்சிறு சிறார்களுக்குச் செந்தமிழின்*
*செழும்பண்பு செறிந்திடவே கதைகவிதை*
*வன்னவெழிற் படங்களுடன் நூலுமாக்கி*
*வளமாக அன்புடனே தரும்வள்ளல்,*
*கன்னல்தமிழ் 'அநுவைநா' என்பான்*
*கலையிலக்கியத் தாற்காணும் மணிவிழாவில்*
*இன்னிசை மனையாளுடன் இனிதாய்,*
*எம்பிரா னருளாலென் றும்வாழி!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

*இலக்கண வித்தகர்—*

*தென்மயிலைச், சமாதான நீதவான், பண்டிதர்*

**இ. நமசிவாய தேசிகர் அவர்கள்**

*வழங்கிய*

# பாராட்டுரை

கல்லூரி அதிபரும், எழுத்தாளரும், பொதுசன சேவையாளரும் ஆகிய திரு. அநு. வை. நாகராஜன் அவர்களை, அநுராதபுரம் விவேகானந்த மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகச் சேவை புரிந்த காலத்திலிருந்து அறிவேன்.

அக்காலத்தில் அவர்கள் ஆக்கி வெளியிட்ட ''மார்கழி மங்கையர்'' எனும் நூல், அவர்களது சைவசமயம், தமிழ் என்பனவற்றின் மீதுள்ள பற்றையும், ஈடுபாட்டையும், அறிவுத் திறனையும் வெளிப்படுத்திற்று.

அவர்கள், எனது ஊராகிய தென்மயிலை (கட்டுவன்) வாசரும், விதானையாருமாகிய அமரர் திரு. நல்லதம்பி நாகலிங்கம் அவர்களின் இளைய மகளை விவாகஞ் செய்த நாளிலிருந்து அவர்களோடு எனக்கு நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. அவர்கள் பழகுவதற்கு இனியவர்கள். தென்மயிலை ஞானோதய வித்தியாலயத்தின் அதிபராக அவர்கள் இருந்த காலத்தில், அவர்களது நிருவாகத் திறமையும் பொதுநல ஈடுபாடும் பலராலும் அறியப்பட்டுப் பாராட்டப் பெற்றன. வித்துவ சிரோமணி சி. கணேசையர் அவர்களின் நினைவு மன்றத்தின் செயலாளராகவும் அவர்கள் பெரும்பணி ஆற்றியுள்ளார்கள். தெல்லிப்பழை கலை இலக்கியக் களம், யாழ் இலக்கிய வட்டம், எழுத்தாளர் ஒன்றியம், பிரஜைகள் குழு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம் முதலான அமைப்புகளிலிருந்து இப்பொழுதும் நற்சேவை செய்கிறார்கள்.

அவர்களால் ஆக்கப்பெற்ற நூல்கள் பாராட்டும் பரிசும் பெற்றமை தமிழ் உலகமறியும்.

இங்ஙனம், தக்க பல்துறை ஆற்றலும், திறமையும் ஆளுமையும் மிக்க திரு. நாகராஜன் அவர்களுக்கு 'மணிவிழா' எடுக்கப்படுவது மகிழ்ச்சி தருகின்றது.

இம்மணிவிழா இனிது நிறைவெய்துக. திரு. அநு. வை. நாகராஜன் அவர்கள் குடும்பத்தோடு பல்வகை நலனும் எய்திப் பல்லாண்டு வாழ வாழ்த்தி மகிழ்கிறேன்.

தென்மயிலை - (கட்டுவன்)
தெல்லிப்பழை.
*15-08-93*

—இ. நமசிவாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கலை இலக்கியக் களத்தின்*
*தலைவர்—*
**சைவப்புலவர், சு. செல்லத்துரை அவர்கள்**
*வழங்கிய*

## நன்மணிப் பாமாலை

▽ பன்னிரு உயிர்கள் சேர்ந்து
பயில்தமிழ் நிலைபெறு மாப்போல்
இன்கலை இலக்கியக் களத்தார்
இனியர் பன்னிரு வருள்ளே
நன்னிலை நிதிநிர் வாகி
நமர்நாக ராஜ னுக்கு
நன்மணி விழாதனை யெடுத்தோம்
நலம்பெற வாழ்த்து கின்றோம்!

▽ சிறுகதை கவிதை நாவல்
திறனாய் வுரைச்சித் திரங்கள்
சிறுவர் நல்லிலக் கியங்கள்
செவ்விகள் நாட கங்கள்
அறிவியல் சைவ நூல்கள்
அவையறி பேச்சு வன்மை
திறனிவை. 'அநுவைநா' வின்
சிந்தனை வெளிப் பாடாகும்!

தேசிய [illegible] பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

▽ சிறுகதைக்(கு) 'அவன் பெரியன்'
சஞ்சிகைக்(கு) ''அன்னை'' அன்னான்
சிறுவரின் நவீனத் துக்குக்
''காட்டி லொருவாரம்'' ஆகும்
மறுவறு சமய நூல்நல்
''மார்கழி மங்கையர்'', மேலாம்
''அறிவியல் மேதை'' இன்ன
'அநுவைநா' விருதைக் காட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

▽ கல்வியோ டொழுக்கம் பேணிக்
கற்றதன் படியே வாழ
நல்வழி காட்டும் ஆசான்
நலந்திகழ் அதிபர் மேலாம்
வல்லதன் வாண்மை யாலே
வளாகமும் மாடி யோடு
பல்கிடப் புதிதாய் ஆக்கும்
பணியில் தாவடியை வென்றார்.

▽ பாரிக்கு மோர்வலு விழுந்தார்
"வாழ்வகம்" ஒடுவலி வடக்கின்
சீர்குலைந்து சிதைந்த மக்கள்
சீர்பெற கழக மாதியில்
ஊர்ப்பணிக் குரிமை பூண்ட
உயர்மனப் பாங்கும் பண்பும்
யார்க்குள திவர்போ லம்மா?
யாவர்க்கும் மணியாய் வாழ்வார்!

▽ பல்துறை விருது பெற்ற
பண்பட்ட கலைஞன், நாட்டின்
பல்வகை நிறுவனங் களூடே
பயன்தரப் பணிசெய் வல்லோன்
நல்லதை ஒழுங்காய்ச் செய்யும்
நண்மணி நாக ராஜன்
சொல்லணி பூணும்மணி விழாவின்
சுடர்மணி யாகி வாழி!

—சு. செல்லத்துரை

கலை இலக்கியக் களம்,
தெல்லிப்பழை — இணுவில்,
23-03-93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணலென நிமிர்ந்து நிற்கும் படைப்பாளி —
# அநு. வை. நாகராஜன்

நோக்குநர்; 'சிற்பி' - சி. சிவசரவணபவன்
(முன்னைநாள் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர்)
'கலைச்செல்வி' — சிற்றிதழ் ஆசிரியர்

தோற்றுவாய் "முழுமையான பௌத்த - சிங்களப் பிரதேசத்தில் வாழ்ந்து, வளர்ந்து, கத்தோலிக்கப் பாடசாலைகளிற் கல்வி கற்ற ஒருவரால், தரமான தமிழ் எழுத்தாளராகவும், தரமான சைவப் பண்பு கமழுந் தமிழ்ப் பேச்சாளராகவும், பக்திக் கவிஞராகவும் புகழ் பெற முடியுமா?"

"முடியும்"

என்பதற்குச் சிறந்த உதாரணமாக விளங்குகிறார், திரு. அநு. வை. நாகராஜன்.

அவர் பிறந்த ஊர், யாழ்ப்பாணத்து வடமராட்சியைச் சேர்ந்த உடுப்பிட்டி. சின்னஞ் சிறு பருவம் முதல் வாலிபம் வரை வாழ்ந்த இடம், அநுராதபுரம். வாழுஞ் சூழலுக்கு இசைவாகத் தன்னை மாற்றிக் கொள்வது, மனித இயல்பு. ஆனால், நாகராஜனின் பெற்றோர் எந்நேரமும் 'கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் கொண்டு இருந்தபடியால், இவர் சூழலுக்கு இரையாகாமல் தப்பினார். அநுராதபுரத்தில் இருந்த அவர்களின் வீடு, எப்பொழுதும் உடுப்பிட்டித் தமிழ் வீடாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓய்வு நேரங்களிலும் நான் வீட்டிலேயே இருக்க வேண்டிய நிர்ப்பந்தம். வெளியே சென்று நண்பர்களுடன் அரட்டை அடிப்பதற்கும் உலாத்துவதற்கும் முற்றாகத் தடை. நல்லவை - தரமானவை எனப் பெரியவர்களால் தெரிவு செய்யப்பட்ட புத்தகங்களும் சஞ்சிகைகளுமே என் நண்பர்கள். அநுராதபுரம் புனித சூசையப்பர் கல்லூரியில் நான் மாணவனாக இருந்த போதும், பின்பும் தனிமைக் கொடுமையிலிருந்து தப்புவதற்காக 'சாரணீயம்', செயின்ற் ஜோன்ஸ் முதலுதவிப்படை போன்ற அமைப்புகளிற் சேர்ந்து செயற் பட்டேன்" என்று திருப்தியுடன் இன்று குறிப்பிடுகிறார், திரு. நாகராஜன்.

குழந்தை உளவியல் - சிறுவர் சுதந்திரம் போன்றவற்றை அறிந்திராத அல்லது அறிந்தும் அதிகம் அலட்டிக் கொள்ளாத வைரமுத்து - இராசம்மா தம்பதிகளின் கண்டிப்பும் - கறாரும் கல்வித்துறையில் நாகராஜன் பன்முக ஆளுமையுடைய ஒரு மாநுடனாக முன்னேறுவதற்கு வழிவகுத்தன.

அவை

— பொறுப்புணர்ச்சியுடன் உத்தியோகக் கடமைகளை, ஆற்றும் ஆற்றலை வளர்த்தன;
— ஓய்வு நேரத்தை ஊர்ப்பணிக்கு அர்ப்பணிக்கும் மனப்பான்மையை ஏற்படுத்தின;
— கலை, கலாசார உள்ளுணர்வுகளை உணர்த்தின:
— பழைமையிற் காலூன்றி புதுமையை வரவேற்கும் ஓர் எழுத்தாளனை - படைப்பாளியை உருவாக்கின

இவை அனைத்தும் இணைந்த ஒரு கண்ணியமான ஒரு குடும்பத்தனாக அவரைப் புடம் போட்டன.

கல்வியும் பணிகளும்

இலண்டன் பல்கலைக் கழக இண்டராட்ஸ், கொழும்பு பல்கலைக் கழக முதனிலைச் சட்டமாணி, சென்னைச் சைவ சித்தாந்த சமாஜ - சைவப் புலவர், தமிழ்நாடு சமூக சேவை விஞ்ஞான டிப்ளோமா, சிறு கைத் தொழில் டிப்ளோமா என்பவை இவர் பெற்ற கல்வித் தராதரங்கள். இவற்றோடு, ஆசிரியர் பயிற்சி, இதழியல் (Journalism), அச்சியல் (Printing) ஒளிப் படவியல் போன்றவற்றிலும் தொழில்முகப் பயிற்சிகளும் உரிய இடங்களிற் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார - புகையிரதத் திணைக் களங்களிற் சிறிது காலம் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய பின்னர், ''எழுத்தறிவிக்கும் இறைபணியை'' 1958 ல் மேற் கொண்டு அநுராதபுரம், கொழும்பு, கலாவெவ, நுகேகொடை, தெகிவளை, யாழ். மயிலிட்டி தெற்கு (கட்டுவன்) ஆகிய இடங்களில் ஆசிரியராக - விசேட பதவி (தரம் II) ஆசிரியராக - அதிபராகக் கடமை ஆற்றி, இப்பொழுது யாழ். தாவடி இ. த. க பாட சாலையில் முதலாந் தர அதிபராகப் பணியாற்று கிறார், திரு. அநு. வை. நா.

ஓய்வு நேரங்களில் ஒன்றுமே செய்யாமல் இருப்பதற்குத் தெரியாத திரு. நாகராஜன், தெல்லிப்பழை விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தின் பொதுச் செயல ராகவும், வலி வடக்குப் புனர் வாழ்வுக் கழகம், தெல்லிப்பழை கலை இலக்கியக் களம், யாழ் இலக்கிய வட்டம் என்பனவற்றின் மூல வேர்களில் ஒருவராகவும் அவற்றின் முக்கிய பதவிகளில் ஒருவராகவும் இருந்து தொண்டாற்றுகிறார். இத்தனை பணிகளுக்கும் இடையில், இவருக்கு எழுதுவதற்கு எப்படி நேரம் கிடைக்கிறது?

''வாசிப்பதும் எழுதுவதும் எனக்குத் தெம்பூட்டு கின்றன. சோர்வடையும் உடலுக்கும் உள்ளத்துக்கும் அவையே எனக்குச் சிறந்த 'ரொனிக்' ''
என்கிறார், நாகராஜன்.

எழுத்தும் பிறபணிகளும்

தென்னிந்தியச் சிறுவர் சஞ்சிகையான 'கண்ணன்' நடத்திய போட்டியில் (1950ல்), பரிசு பெற்றபோது இவருக்கு 'மார்க்கண்டேய' வயது. அப்போது எழுத் துலகில் அடியெடுத்து வைத்தவர், இன்று உறுதியாக நிமிர்ந்து நிற்கிறார்.

திரு. 'அநு. வை. நா' வின் முதற் சிறுகதை சுதந்திரன் (யார்மேற் பழி?) இதழில் வெளியானது. இலங்கையிற் பிரபல வார - மாத இதழ்களான வீரகேசரி - தினகரன் - தினபதி - சிந்தாமணி - ஈழநாடு ஆதியாம் பத்திரிகைகளில் இவருடைய கதைகள் - கட்டுரைகள் - கவிதைகள் வெளியாகியுள்ளன. தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் 'முரசொலி', 'கிராமோதயம்' 'தமிழ்நாடு' ஆகிய சஞ்சிகை - பத்திரிகைகளில் இவருடைய ஆக்கங்கள் இடம் பெற்றமை விசேடமாகக் குறிப்பிடத் தக்கது. குறிப்பாக, 'வீரகேசரி' இவருடைய சிறுவர் ஆக்கங்களை ('தொல்குடி மாந்தர்', 'மாணவர் நல்லுரைக் கோவை') தொடர் கட்டுரைகளாகப் பல மாதங்கள் வெளியிட்டுச் சிறப்பித்திருக்கிறது.

1958 - 63 காலப் பகுதிகளில் அநுராதபுரத்தில் 'அன்னை' எனுஞ் சிற்றேட்டினை இவர் வெளியிட்டமை ஒரு பெருஞ்சாதனை எனலாம். தமிழ் முஸ்லிம் எழுத்தாளருக்கு 'அன்னை' ஓர் அன்னையாகவும் விளங்கி இருக்கிறாள். அத்தோடு, அந்நாளில் அங்கு ஓர் எழுத்தாளர் (தமிழ்) பரம்பரையை வித்திட்டு வளர்க்கவும் இவர் ஒரு மூலவராகவும் இருந்திருக்கிறார். இவர் வழிநடத்தலில் வளர்ந்த வாரிசுகளிற் சிலர் இன்று, தென்னிலங்கையின் பிரபல எழுத்தாளர்களாக விளங்குகிறார்கள்.

இதே காலப் பகுதிகளில் (1958 - 70 களில்) இவர் வீரகேசரி, 'ஒப்சேவர்', 'தினபதி', 'சிந்தாமணி' போன்ற நாள் வார ஏடுகளின் அநுராதபுரம் செய்தி நிருபராகவும் ஒளிப்பட நிருபராகவும் இருந்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மூதன் முதலிற் (70 களில்) செய்தி இதழொன்றை வெளியிடத் தீர்மானித்த பொழுது, அதற்கான செயல் வடிவங் கொடுத்து, அதன் இதழாசிரியராகவும் இருந்து, அதனைச் சிறப்பாகச் சில ஆண்டுகள் வெளியிட்டவர், திரு. நாகராஜன்.

தொழிற் சங்கவாதியாகவுஞ் செயற்பட்ட இவர், பல போராட்டங்களிலும் (சுயமொழி ஆசிரியர் சம சம்பளம் போன்ற தீவிர போராட்டங்கள்) முன்னின்று ஏனைய ஆசிரிய சங்கங்களுடன் இணைந்து, முன்னணியில் நின்று உழைத்துள்ளார்.

பள்ளி ஆசிரியர் — அதிபர் — இலக்கிய கர்த்தா — இறைபக்தன் - சமூகப் பணியாளன் - அறிவியலாளன் - கலைஞன் - கலை இலக்கிய ஆர்வலன், ஆய்வாளன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்போர் இவரிற் சங்கமித்திருப்பதை இவருடைய ஆக்கங்களின் வகைகள் காட்டுகின்றன.

- மார்கழி மங்கையர் (சமயம் 1971)
- மாணவர் நல்லுரைக் கோவை (சமூக அறநெறி - 1976)
- தென்மயிலை வீரபத்திரர் ஊஞ்சல் (கவிதை - சமயம் - 1986)
- விநாயக மகத்துவம் (சமயம் - விளக்கவுரை - 1987)
- தாய் தரும்தாலாட்டு (நாட்டார் இலக்கியம் -1988
- காட்டில் ஒரு வாரம் (சிறுவர் வன நவீனம் - 1988)
- விநாயகர் திருவருள் (சிறுவர் சிந்தனைக் கதைகள் - 1992)
- தேடலும் பதித்தலும் - அறிவியல் மேதைகள் - வரிசை: I - (அறிவியலாளர் வரலாறு - 1992)
- அவன் பெரியவன் — (சிறுவர் குறுநவீனம் - 1993)

என்பவை அச்சில் வெளிவந்த இவருடைய நூல்களாகும். இவற்றுடன், பல்துறை சார்ந்த கட்டுரைகள், கவிதைகள் ஆய்வு நோக்குகள் நாட்டின் பிரபல சிற்றேடுகளிலும், சஞ்சிகைகளிலும் அவ்வப்போது வெளிவந்துள்ளன.

'காட்டில் ஒரு வாரம்' என்ற சிறுவர் நூல் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றதுடன் 'இலக்கிய வித்தகர்' என்ற பட்டத்தையும் நாகராஜனுக்கு ஈட்டிக் கொடுத்திருக்கிறது. இலங்கை இலக்கியப் பேரவை (யாழ். இலக்கிய வட்டத்தின் ஓர் அமைப்பு) இந் நூலுக்குப் பரிசும் பாராட்டும் வழங்கிக் கௌரவித்திருக்கிறது. அத்துடன் மட்டுநகர் மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களமும் வாழ்த்துடன் பாராட்டும் தெரிவித்து இருக்கிறது.

திரு. நாகராஜன் நாடகத் துறையிலும் அதி ஈடுபாடும் ஆற்றலும் உடையவர். இவரது பள்ளி மாணவர் நாடகங்கள் பல பரிசில்களும் பாராட்டுகளும் பெற்றன. நாடகப் பிரதியாக்கம், நெறியாளுகை, காட்சியமைப்பு, ஒப்பனை என்பவற்றிலும் ஆற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுடையவர். பிரபல சிங்கள நாடகக் கலைஞர் ஹென்றி ஜயசேனாவின் நாடகப் பயிற்சிப் பட்டறையிற்(1970 களில்) கலந்து பெரும் பயன் பெற்றவர். சிங்கள நாடகங்களிலும் கௌரவ நடிகராக நடித்தும் உள்ளார். 'முகம் காணமுடியாத முகமூடிகள்', 'தொடங்கி விட்டோம் யாகம்' என்பன அண்மையில் இவர் மேடையேற்றிய நாடகங்களாகும்.

இவருடைய இலக்கியப் பணிகள் கூடுதலாக, சிறுவர் இலக்கியத் துறையை நாடி நிற்கின்றன. குறிப்பாக, அவை சிறுவரைக்கவரக்கூடிய விதங்களில் சிறந்த அறிவு சார்ந்த நூல்களாகவும் உளவியல் அம்சங்கள் கொண்ட நூல்களாகவும் இருக்கின்றன. அத்துடன், இவர், அறிவுத் துணுக்குகள் தருவதில் அதிக ஆர்வமுடையவராகவும் இருக்கிறார்.

அண்மைக் காலங்களில் மாணவரது அறிவியல் சார்பான விடயங்களிற் கூடிய ஈடுபாடு கொண்டிருக்கிறார். வானொலியிலும், பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் தொடர் நிகழ்வுகள், கட்டுரைகள், துணுக்குகள் தந்து கொண்டிருக்கிறார்.

இனப் பிரச்சினை தொடர்பாகக் காலத்துக்குக் காலம் இலங்கையில் ஏற்பட்ட பிரளயங்களில் இவரது பல ஆக்கங்கள் அடித்துப் போய்விட்டன. 1958, 77 83, 85, 87 ஆண்டுகளில் அநுராதபுரம், கொழும்பு கட்டுவன் ஆகிய இடங்களில் வீடு, காணி, உடைமைகளுடன் பாசமிகு உயிர்களையும் இழந்தார் இவற்றுக்கு எல்லாங் கலங்காத இவர், தன்னை ஆகுதி ஆக்கிப் படைத்த ஆக்க இழப்புகளையே எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிக்கிறார்.

வாழ்வும் வளமும்

உயர்ந்த சமதர்ம அரசியற் சிந்தனை நோக்கும் செயற்பாடும் கொண்ட திரு. நாகராஜன் எந்தச் சந்தர்ப்பத்திலுங் கட்சி அரசியலில் ஈடுபடவில்லை. சந்தர்ப்பங்களும் வாய்ப்புகளும் வலிய வந்தபோதிலும் எந்தவொரு அரசியல் மேடையையோ 'கதிரை' யையோ நாடாதிருந்தார். இவர், விரும்பி இருந்தால் அந்நாளில் சிங்களப் பகுதிகளில் ஒரு தமிழ் அரசியல் வாதியாக விளங்கியிருப்பார். இதற்கொரு காரணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமை முதல் இவரிடம் குடிகொண்டிருந்த ஆழ்ந்த தமிழ் சமய உணர்வும், தனித்துவமான மனித நேய முமாக இருக்கலாம். இவர் தன்னை எப்பொழுதும் ஓர் ஆசிரியனாக - படைப்பாளியாக - சமூகப்பணியாள னாக - மானுட நேசனாக - கடமையிற் கண்ணுள்ள விசுவாசியாக இருக்க விழைபவர். இக்குண இயல்புகள் இவரை அரசியலில் இருந்து தூர விலக்கி வைத் திருக்கிறது.

திரு. நாகராஜனின் மனைவி, நேசபூபதி நாகராஜன் தமிழ்நாட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துச் 'சங்கீத பூஷணம்' பட்டதாரி. நாடறிந்த, ஒரு சிறந்த சாரீரவளங் கொண்ட, இசைக் கலைஞர். கொக்குவில் இந்துக் கல்லூரியின் இசை ஆசிரியை. ஒரே மகன் சிவாநுஷன் (சங்கர்), இதே கல்லூரியின் இடைநிலை வகுப்பு மாணவன்.

இந்த ஆண்டில் அறுபதாவது வயதை நிறைவு செய்ய இருக்கும் திரு. நாகராஜன், தனது ஆசிரியத் தொழிலி லிருந்து ஓய்வு பெற இருக்கிறார். தனது இளைப் பாற்றுக் காலத்தில். முழுமையான எழுத்துத்துறையை விருத்தி செய்யத் திட்டமிட்டுக் காத்திருக்கிறார்.

நிச்சயமாக, இவரது கலை - இலக்கிய ஆர்வமும் அத னூடு தோய்ந்த ஈடுபாடும் ஒரு பின்னணியாக இவருக்கு அவை அமையலாம் அல்லவா? ▭

— நன்றி ''மல்லிகை'' - ஜனுவரி 1993 - இதழ்: 238.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1987 – 88களில் வெளியான*

# ஈழத்துச் சிறுவர் இலக்கியம்

## —ஒரு மதிப்பீடு

*ஆய்வாளர்:* **திருமதி பாலராணி சண்முகராஜா**

தமிழில் சிறுவர் இலக்கியம்

ஒரு சமூகத்தின் தன்மைகளை - அதன் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் சாதனங்களுள் மிகமுக்கியமானது, இலக்கியம் ஆகும். இந்த வகையில் நாளைய சமூகத்தைக் கட்டி எழுப்பும் சிற்பிகளாகவும், நாளைய கதா பாத்திரங்களாகவும் விளங்கும் குழந்தைகளைப் பற்றியும் குழந்தைகளுக்காகவும் இலக்கியங்கள் தோன்றுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். நாளைய மனிதர்களை உருவாக்கும் காரணிகளில் மிக உன்னதமானது, இலக்கியம்.

குழந்தை இலக்கியம் எனும்போது, ''குழந்தைகளுக்காக, குழந்தை உள்ளத்தோடு குழந்தை மொழியில் உலகத்தை விளக்குவதே குழந்தை இலக்கியம்'' என்ற கலாநிதி பூவண்ணன் கூற்று, மனங்கொள்ளத் தக்கது. ஆகவே, குழந்தை இலக்கியம் வளர்ந்தோர் இலக்கியத்திலிருந்து வேறுபடும். இது, ஒரு சிற்பத்தைச் செதுக்குவது போன்ற நிதானமான செயல் என்பதும் தெளிவாகிறது.

தமிழில் குழந்தை இலக்கியம் என்று பெரும்பான்மையாக வழங்கப்பட்டு வருகின்ற போதிலும், மழலை—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் — பாலர் — பாப்பா முதலிய பல்வேறு சொற்கள் இவ்விலக்கியத்தைக் குறிக்கப் பயன்படுகின்றன. அடுத்து, குழந்தை என்ற சொல்லுக்குள் அடங்குபவர் யாவர்? என்பதை வரையறை செய்ய வேண்டியது முக்கிய விடயமாகும். பிள்ளைப் பருவத்தைப் பாட்டியல் நூல்கள் எடுத்து உரைத்தாலும், பதினான்கு வயது வரையுள்ள ஆண் பெண் இருபாலாரையும் குழந்தை என்ற சொல்லாற் குறிக்கலாம் என்று மேனாட்டுக் குழந்தை, இலக்கிய கர்த்தாவான "ஜனற் அடம்ஸ்மித்" குறிப்பிடுகிறார். இவ்வயது வரையுள்ள குழந்தையின் உள வளர்ச்சி, மொழி வளர்ச்சி, என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஐந்து நிலைகளாக வகுத்து, அதன் தரத்துக்கு ஏற்ப இலக்கியம் அமைய வேண்டும் "என்று முத்து. சண்முகம் கூறுகிறார். குழந்தைகளின் வயது, மூளை வளர்ச்சி, மொழித்திறன், ஆற்றல், விருப்பு, வெறுப்புகள், சிந்தனைகள் என்பவற்றுக்கு அமைய இலக்கியம் படைக்கப்படும்பொழுது, அவற்றைக் குழந்தை இலக்கியம் என்று கூறலாம். இக் குழந்தை இலக்கியமானது, மேலை நாடுகளில் வியக்கத்தக்க வகையில் ஒரு தனிப்பட்ட கலையாக வளர்ச்சி அடைந்துள்ளது. தமிழைப் பொறுத்த மட்டில், "இதன் வளர்ச்சி மந்தமாகவே உள்ளது. குழந்தைகளுக்காக எழுதப்பட்ட பாடல்களோ — கதைகளோ 20ம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை வளரவில்லை" என்று கண. முத்தையா கூறுவதும், "தமிழில் சிறுவர் இலக்கியம் என்று சிறப்பாகக் கூறக்கூடியது ஒப்பீட்டளவில் மிகக் குறைவு" என்ற பேராசிரியர் க. கைலாசபதியின் கூற்றும் இந்நிலையைச் சுட்டிக் காட்டப் போதுமானதாகும். தமிழிலும் இது ஒரு தனித்துறையாக வளரத் தொடங்கியுள்ளமை, அண்மைக் காலத்தில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

குழந்தை இலக்கியத்தைப் பற்றிய சிந்தனைகள் தமிழுக்குப் புதியதல்ல தொன்மை வாய்ந்த தொல்காப்பியம் — பொருளதிகாரத்தில் வரும் "பொருள் மரபில்லாப் பொய்மொழி" என்ற தொடருக்குக் கூறப்பட்டு வரும் உரைப்பகுதியும், புறநானூற்றில் அறிவுடைய நம்பியின் பாடலும், புதல்வரின் மாண்பு பேசும் திருக்குறளும் இவ்வுண்மையைச் சொல்லப் போதுமான எடுத்துக்காட்டுகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் சிறுவர் இலக்கியம், ஆரம்பக்கட்டத்தில் இருக்கின்ற போதிலும், சமீப காலத்தில் அதற்கு விசேட கவனஞ் செலுத்தப்படுகின்றது — செலுத்தப் படுவது குறிப்பிட வேண்டியது ஒன்றாகும்.

குறித்த காலத்து வெளியீடுகள்

1987 - 88ம் ஆண்டுக் காலத்தில் வெளிவந்த அனைத்தும் நமக்குக் கிடைக்கவில்லை. கிடைத்த வற்றைக் கொண்டு, ஒரு திறனாய்வுப் பார்வையைச் செலுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சிறுவர் இலக்கியம் மூன்று கிளைகளைக் கொண் டுள்ளது. கவிதை — கதை — நாவல் என்பனவே அவையாகும். குறிப்பிட்ட காலத்தில், ஒரு நாவலும் ஒரு சிறுகதைத் தொகுப்பும் பல கவிதைத் தொகுப் புகளும் வெளிவந்துள்ளன. இம் மூவகைப் படைப்பு களையும் தாங்கி, சிறுவர்களுக்காக ஒரு மாத இதழும் மலர்ந்துள்ளது.

'காட்டில் ஒரு வாரம்' என்ற சிறுவர் நவீனம் சாதனை படைத்துள்ளது அதன் அமைப்பு சித்திரங்கள் — அச்சுப் பதிவு ஆகிய அனைத்தும் தரமாக உள்ளன. எளிமையும் இனிமையும் கொஞ்சுந் தமிழில், ஆசிரியர் எழுதியுள்ளார். ஈழத்தில், இப்படி ஒரு சிறுவர் நாவலா? எனத் திகைக்க வைக்கிறது. அந்தவகையில், திரு. அநு. வை. நாகராஜன் பாராட்டுக்குரியவரே!

காடு, எப்போதும் கவர்ச்சியான களமாகும். ஆங்கிலத்தில், 'டார்ஸன்' கதைகள் புகழ்பெற் றவை என்பது யாவரும் அறிந்ததே. தொலைக் காட்சியில் வரும் 'டார்ஸன்' காட்சிகளில் ஆழ்ந்து போயுள்ள நம் நாட்டுச் சிறுவர்களுக்கு, அவர் களுடைய நாட்டுச் சூழலைக் களமாக்கி ஒரு வீரசாகசக் கதையை அளித்துள்ளார், திரு. நாகராஜன்.

கதையில் ஆசிரியர் புகுத்திய "அதிசயப் பிறவி" (ஒரு 'சஸ்பென்சாக') மனதைக்கவரும் மர்மமாக இருந்து, கதை முடியும்வரை சிறுவர்களை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்த புத்தகத்தைக் கீழே வைக்க விடாது மெய்ம்மறக்கச் செய்கிறது. அத்துடன், இன்றைய கால கட்டத்தோடு பொருந்தக்கூடிய சந்தர்ப்பங்களை இணைத்துள்ளதனால், கதை உயிர் ஓட்டமுள்ளதாக விளங்குகிறது. ஆசிரியர், வேற்றுமையில் ஒற்றுமை காண விழைந்துள்ளார் என்பதற்கு, குணபாலா அங்கிள், கருணாரட்ணா தம்பதிகள் ஆகிய பாத்திரங்கள் எடுத்துக் காட்டுகளாகும்.

இந் நாவலில் கதாசிரியர், தான் தொழிலால் ஓர் ஆசிரியர் என்பதை வெளிக்காட்டப் பல கட்டங்கள் உள்ளன. தமது உளவியல் அறிவினை ஆங்காங்கு பளிச்சிடும் சம்பவங்களாக உருவாக்கித் தந்துள்ள சிறப்பைப் போற்றத்தான் வேண்டும். பெரியோர், சிறுவர்களுக்கு உளச் சுதந்திரத்தையும், சுதந்திரமான செயற் பாட்டையும் அளித்தல் அவசியம் என்பதற்கு திரு. திருமதி கந்தசாமி எனும் பாத்திரங்கள், உதாரணங்களாக முன் வைக்கப்பட்டுள்ளன.

நவீன கற்பித்தல் பண்புகளான செயன்முறை, நேரடி அநுபவம், கற்றல் இடமாற்றம் ஆகியன மிகமிக நுணுக்கமான முறையில் விளக்கியுள்ளார். கமல் - கமலி என்ற இரு சிறுவர்களும் அதிசயப் பிறவியைத் தேடித் திரிவதும் ஈற்றில் அந்த மர்மத்தைக் கண்டறிவதும் விநோதமாக இருந்த போதிலும் சிறுவர்களுக்கு திறமை - சாதுரியம் பிரச்சனைகளைத் தீர்க்கும் ஆற்றல் என்பனவற்றைப் படிப்பினைகளாக வழங்குவதற்கு இக் கதை உதவுகிறது.

திரு. நாகராஜன் வளரும் சந்ததியினருக்கு வழங்கிய இந்நாவல், அவர்களின் உளச் சுதந்திரத்துக்கு வழி அமைப்பதோடு மனிதநேய ஜீவ ஒளியும் வீசுவதால், நாட்டின் சுபீட்சத்துக்கும் விடிவெள்ளியாகத் துலங்குகிறது. இந்நாவலைப் பிள்ளைகள் பொழுது போக்குக்காக வாசித்தாலும், ஆசிரியர்-மாணவர்களின் ஆளுமை வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெருநோக்கத்தையே கருத்திற் கொண்டு எழுதியுள்ளார் என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியும்.

மயிலங்கூடல் த. கனகரத்தினம் அவர்களின் 'ஜாதகக் கதைகள்,' பாரதியின், ''பிறநாட்டுத் தமிழ் அறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்'' என்ற கூற்றை நினைவூட்டுகின்றது. மொழியின் வளர்ச்சிக்கு மாத்திரமல்ல இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும், ஓர் இனம் மற்ற இனத்தின்கருத்துகளை-கொள்கைகளை நம்பிக்கைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். இப்புரிந்துணர்வு இலக்கியங்களின் வாயிலாக நடைபெற்றால், நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிப் பாதுகாக்க முடியும். சிறுவர்களுக்கு அவர்களின் பிஞ்சு உள்ளங்களிலே அன்பையும், அகிம்சையையும் வளர்ப்பதற்குக் கதைகள் பேருதவியாக அமையும் என்பதிற் சந்தேகமில்லை. இந்நூலின் அமைப்பு, அழகாகக் கவர்ச்சியாக விளங்குகிறது. கதைகள் யாவும் மனிதப் பண்பையும் மனிதநேயத்தையும் வேறொரு வடிவத்தில் வெளிப்படுத்துவனவாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு கதையின் முடிவிலும் கொடுக்கப்பட்டுள்ள படிப்பினை வாசகம் (moral) மிகப் பொருத்தமாக உள்ளது. இது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். அழகான அச்சுப்பதிவு, சிரான சித்திரங்கள் அனைத்தும் நூலுக்கு மெருகூட்டுகின்றன. ஜாதகக் கதைகளின் அடித்தளமாக விளங்கும் போதிசத்துவரின் கருணை உள்ளம் வெளிப்படுத்தும் விதம் அழகாகக் கையாளப்பட்டுள்ளது. ஆசிரியரின் தெளிவான நீரோட்டமான வசன நடையும், தகுந்த சொற்களைத் தகுந்த இடத்திற் கையாளும் நுட்பமும் போற்றத் தக்கது.

சிறுவர் பாடல்கள்

கோப்பாய் சிவத்தின் 'பூந்தோட்டம்', திருமதி சொர்ணவல்லி பத்மநாப ஐயரின் நினைவு வெளியீடாகிய 'சிறுவர்களுக்கான அறிவியற் பாடல்கள் திருமதி சரஸ்வதி சோதிப்பெருமாள் நினைவு வெளியீடாகிய 'சிறுவர் கவிமலர்' தம்பாலை - அச்சுவேலி வல்லிபுரம் கார்த்திகேசு நினைவு வெளியீடாகிய ''பாலர் கதைப் பாடல்கள்'', தென்மயிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாட்டி சின்னப்பிள்ளை செல்லத்துரை நினைவு வெளியீடாகிய 'அன்னை நினைவமுதம்', பண்டிதர் க. மயில்வாகனம் அவர்களின் 'குழந்தைகளுக்கான இன்பத் தமிழ்ப் பாடல்கள்' அனைத்துமே சிறுவர் இலக்கியங்களாக மிளிர்கின்றன. இவையாவும் சிறுவர் கவி மலர்கள் - நினைவு வெளியீடுகள் அவையாவும் சிறுவர்களை நினைந்த புதிய சிந்தனையின் வடிவம், எனலாம். நினைவு வெளியீடுகள், சுயபுராணமாகக் குடும்பப் புகழை எடுத்தியம்பும் ஓசை வடிவங்களாக அமையாமல், பயனுள்ள இலக்கியப் படைப்புகளாக வழிவகுத்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே.

சிறுவர் பாடல்கள் பெரும்பாலும் ஏவல் வடிவங்களாக அமைந்து வந்துள்ளன. 'அப்படிச் செய்ய வேண்டும்', 'இப்படிச் செய்யாதே' என்ற தன்மையில் முன்னர் விளங்கின. தற்பொழுது, வடிவ அமைப்பிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பாடற் பொருளிலும் புதுமையும் அறிவியல் நோக்கும் புலப்படுகின்றன. சிறுவர் பாடல்கள் குழந்தைகளின் மனோபாவத்தைத் தழுவியதாக அமைய வேண்டும். அவர்களின் சிந்தனைகளைப் பிரதிபலிப்பனவாகவும் அவர்களின் சந்தேகங்களைத் தீர்க்கக் கூடியனவாகவும் விளங்க வேண்டும். கவிஞனும் குழந்தையும் கற்பனை செய்வதில் ஒருவருக்கொருவர் சளைத்தவர் அல்லர். குழந்தை இலக்கியத்தில் கற்பனை இருப்பது அவசியம். ஆனால், அதீத கற்பனை வரவேற்கத் தக்கதல்ல. வரையறையற்ற கற்பனையில் ஈடுபட்ட குழந்தை, யதார்த்தமாகச் சிந்திக்க இயலாதனவாகி விடுவான். 'அம்புலிமாமா'க் கதைகள் சித்திரங்களாலும், அலங்காரங்களாலும் வரவேற்புப் பெற்றாலும், யதார்த்த சிந்தனைக்கு அங்கே இடமில்லை என்றே கூறவேண்டும். நவீன கால கட்டத்தில் வாழும் குழந்தைகளுக்கு அத்தகைய வேதாளக் கதைகளும், மாயாஜால வித்தைகளும் போலி மனப்பான்மையும் நிஜமற்ற நிகழ்வுகளையும் ஏற்படுத்திச் குழப்பத்தில் ஆழ்த்திவிடக் கூடும். சிறுவர் இலக்கியம் என்றால், எத்தகைய கற்பனையும் இடம் பெறலாம் என்ற சிந்தனை மாறவேண்டும்.

கவிஞர்கள்

குழந்தைக் கவிஞர்களில் முன் நிற்பவர்கள் - பா. சத்தியசீலன், கதிரேசன், அம்பி, கல்வயல் வே. குமார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி, ஆடலிறை, மகாகவி, சபா. ஜெயராசா, துரை சிங்கம் ஆகியோர் ஆவர். சிறுவர் பாடல்களின் திசையில் கவிஞர் பார்வை செல்வது நல்ல சகுனமாகும். சத்தியசீலனின் பாடல்கள் தெளிவான சொல்லாட்சியும் சுவையுங் கொண்டவை. ஒரு கவிஞனின் முதிர்ந்த சிந்தனைக்கு இது எடுத்துக் காட்டாகும். அவரது பாடல்களில் மிருகங்களும் பறவைகளும் பேசும் - பாடும். மனித உணர்ச்சிகளின் பிரதிபலிப்பாய் விளங்கும். அவரது பாடல்கள் விமர்சனக்காரரால் மட்டுமன்றி சிறுவர்களாலும் பாராட்டுப் பெற்றவையாகும். துரைசிங்கமும் அம்பியும் சிறுவர் பாடல் மூலம் நீதிகளைப் போதிப்பதில் வல்லவர்கள். அவர்கள் பாடல்கள் சொற்சிக்கனங் கொண்டவை. ஆனால், கருத்துக் கூர்மையானவை. எடுத்த கருத்தை ஆழமாகப் பதிப்பது அவர்கள் நோக்கு. அவர்களது பல்வேறு பாடல்களிலும் இதனைக் காணலாம். பொழுதுபோக்கோடு, கருத்துச் செறிவுங் கொண்டவை அவர்களது பாடல்கள் எனக்கொள்ளலாம்.

கதிரேசன் பாடல்கள் கதைப் பாடல்களாகும். கதை மூலம் கருத்தை வெளிக்கொணரும் பண்பு இவருக்கு உரியது. சில கவிதைகளிற் கதையை மட்டுஞ்சொல்லி மற்றதை ஊகித்தறிய விட்டுவிடும் தன்மையைக் காணலாம். இது சிறுவர் சிந்தனை வளர்ச்சிக்கு மிகவும் அவசியமாகும். சிந்தனையைத் தூண்டும் சக்தி இவரது கவிதைக்கு உண்டு.

மு. பொன்னம்பலத்தின் பாடல்கள் பெரும்பாலும் அறிவு வளர்ச்சியை ஆதாரமாகக் கொண்டு மலர்ந்துள்ளன. இசையுடன் இணைந்த பாடல்கள் மூலம் புதிய கருத்துக்களைப் பாலருக்கு அறிமுகஞ் செய்து வைக்க வேண்டுமென்ற பொதுநோக்கம் காணப்படுகிறது. ஆடலிறையின் பாடல்களும் அத்தன்மையதே. விரிந்து கொண்டு போகும் விஞ்ஞான அறிவை, வளரும் உள்ளங்களில் விதைக்க வேண்டும் என்ற உத்வேகத்தால் எழுதப்பட்டவைகளாக இப்பாடல்கள் தோன்றுகின்றன. பாலர் பாடல்களுக்கு ஒரு புதிய பரிமாணம் இவர்கள் இருவரால் வழங்கப்பட்டுள்ளது என்பது உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வயல் குமாரசாமி, பேசும்மொழி நடையில் கவிதை புனையும் ஆற்றல் மிக்கவர் இஃது ஓர் அரிய முயற்சி. கவிஞர்கள் தமது புலமையை மறந்து, அணிகளையும் அலங்காரங்களையும் மறந்து, படி இறங்கி வந்து சிறுவரோடு சிறுவராகச் சிரித்துப் பேசும் முறையில் அமைவதே சிறுவர் பாடல். இவ்வகையில், ஈழத்துக் குழந்தைக் கவிஞர்கள் சாதனை படைத்துள்ளனர். வார வெளியீடுகளே இவர்களது களம். தொகுதியில் வருமோ, வராதோ என்ற ஐப்பாடு தீராத நிலையிலும் 'நமக்குத் தொழில் கவிதை' என்ற முனைப்போடு பாடிவரும் இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் - என்பதிற் சந்தேகமில்லை.

சிறுவர் சஞ்சிகை 'அர்ச்சுனா'

சிறுவர் இலக்கிய இதழ் என்ற வகையில் 'அர்ச்சுனா' வின் வருகை ஒரு மைல்கல். சிறுவர் இலக்கிய இதழ்கள் பல காரணங்களால் தோல்வி கண்டுள்ளன. தரமான இலக்கிய இதழான, கலைமகள் காரியாலயம் வெளியிட்ட 'கண்ணன்' என்ற சிறுவர் இதழே தாக்குப் பிடிக்க முடியாமல் நின்று விட்டது. 'கல்கண்டு' இதழும் பின்னர் தன்போக்கை மாற்றிப் பல தரப்பட்ட வாசகர்களுக்கு ஏற்ற சிறுகதை - கட்டுரை- துணுக்குகள் முதலியவற்றை வெளியிட்டு உலா வருகின்றது. ஆனால், அது நிச்சயமாக இப்போது சிறுவர் இதழ் அல்ல. அத்தகைய மாற்றங்களைக் கண்ட பின்பும் 'அர்ச்சுனா' உரிமையாளர் அதனைச் சிறுவர் இலக்கிய இதழாக - கல்வி முயற்சி -நல்வாழ்வு ஆகிய நோக்கங்களுடன் வெளியிடத் துணிந்த செயலுக்குப் பெயர்தான் துணிவு.

'அர்ச்சுனா' பல்வேறு வகைகளில் மாறுபட்டதாய்ப் புதுமை படைத்துள்ளது. பொதுவாக - பத்திரிகைகள் மாணவர்களுக்காகக் கதைகள் - கட்டுரைகள் வெளியிடுவதோடு விளையாட்டுச் செய்திகளுக்கே முதலிடம் அளிக்கின்றன. கல்விச் செயற்பாடுகளுக்கோ, கல்வித் துறையில் சாதனை ஈட்டியவர்களுக்கோ, அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. 'அர்ச்சுனா' புதிய அலகு பதிக்க எண்ணி, தமது கல்லூரி பற்றி மாணவர் அபிப்பிராயம், கல்வித் துறையில் ஈட்டிய சாதனை, அவர்களின் விபரம், பேட்டி என்று புதிய அணுகு முறையை முன் வைக்கின்றது. அத்துடன் மாணவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபதேசிக்கும் பாணியில் அமையாது, மாணவர் சிந்தனையைத் தழுவியதாக இருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும்.

'அர்ச்சுனா' வின் இதழ்களை நோக்குமிடத்து, சில அவதானிப்புகள் குறிப்பிடத்தக்கவை.

- வர்த்தக நோக்கு, பிரதானமாகச் சீர்தூக்கப் படவில்லை.
- சிறுவர்களுக்காக மாத இதழ் நடத்த வேண்டும் என்ற தீர்மானம் ஆழமானது - தெளிவானது.
- அதனைத் தரமாக நடத்த எல்லா முயற்சி களும் செய்யப்பட்டன.

எமது முன் வைப்புகளின் பரிமாணம்

**1987-88** ல் இலங்கையில் சிறுவர் இலக்கிய வளர்ச்சி மிகவும் தரமாக அமைந்துள்ளது. இது வளர்ச்சியின் முதிர்ச்சியைக் காட்டுகிறதா அல்லது வளர்ச்சிக்கு ஆரம்பமான துளிர்விடும் முயற்சியா என்று இப்போது தீர்மானிக்க முடியாது.

'காட்டில் ஒரு வாரம்'' என்ற நாவல் எழுத்தாள னுக்கும் வெளியீட்டாளருக்கும் பரிசுஈட்டிக் கொடுக்கக் கூடிய நவீனமாகும். பாடசாலை நூல்களில் இருக்க வேண்டிய அவசியமான ஆக்கமாகும். திரு. நாகராஜன் இன்னும் பல முயற்சிகள் செய்ய இந்த நாவலை வாசகர் உலகம் வரவேற்க வேண்டும்.

ஜாதகக் கதைகள் பிறமொழிக் கதையென்றாலும் அது, சொல்லப்பட்ட விதமும் அதிலிலுள்ள சித்திரங் களும் அதனை ஒரு மொழிபெயர்ப்பு நூலாக நினைக்க மறுக்கின்றது விலையைப் பார்த்து முகஞ் சுளிக்காமல் வாசகர் உலகம் இத்தகைய வெளியீடுகளை வாங்கி இலக்கிய வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

நினைவு வெளியீடுகள் சிறுவர் இலக்கியத்தின் பக்கம் திரும்பியுள்ளது வரவேற்கத் தக்கதே! ''இந்தச் சிறிய வர்களுக்கு எதைச் செய்தீர்களோ அதனை எனக்கே செய்தீர்கள்.'' என்ற விவிலிய நூலில் இயேசு பெருமானின் வாக்கு இங்கே சாலப் பொருந்துகிறது. கள்ளங்கபடமற்ற குழந்தையின் உள்ளத்தில் இறைவன் வாழ்கிறான். அத்தகையவர்களுக்குச் செய்யும் பணி திருப்பணிக்கு ஒத்ததேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துக் குழந்தைக் கவிஞர்களின் பாடல்கள் இசையுடன் பாடக் கூடியன. இத்தகைய அழகான குழந்தைப் பாடல் தொகுதியொன்று வெளியிடப்பட வேண்டியது அவசியமாகும். 'அர்ச்சுனா' சிறுவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். அதனுடைய பணி மேலும் விரிவடையலாம். சிறுவர் கவிதைகளுக்கு ஒரு போட்டி அமைத்து தரமான கவிதைகளைத் தெரிந்து ஒரு தொகுதி வெளியிட வேண்டியதும் அதற்குரிய கடமை ஆகும்.

எதிர் பார்ப்பும் நிறைவும்

இலக்கிய வளர்ச்சி எழுத்தாளனிடம் மாத்திரம் கிளர்ந்தெழுவதாக நினைப்பது தவறாகும். வாசகர்களுக்கும் ஒரு பாரிய பொறுப்புண்டு. வாசகரின் வரவேற்பே இலக்கிய ஆக்கங்களுக்கு வளர்ச்சியும் தூண்டுகோலுமாகின்றது. பெற்றோர் தம் சிறார்க்கு இத்தகைய நூல்களைப் பிறந்த நாள் பரிசாக வாங்கி அளித்தல் வேண்டும். பிள்ளைகளின் வாசிப்புத் திறனை வளர்ப்பதற்கு மாத— வார— இதழ்களை தம் இல்லங்களில் வைத்தல் வேண்டும்.

இவ்வாய்வு முழுக்க முழுக்கப் பாராட்டாகவே அமைந்துள்ளது எனச் சிலர் கருதக் கூடும். விமர்சனம் என்பது குறைகளையும் கூற வேணடும் என்பது நியதி அல்ல. ஒன்று - பூரணமாய் வளர்ந்த பின்னரி, அதன் பெயரால் போலிகள் முளைத்தெழும்பும் போது அத்தகைய விமர்சனம் அவசியம். ஆரம்ப நிலையில் உள்ள ஒன்றை — மலர்ந்து கொண்டிருக்கும் ஒன்றை விமர்சனம் என்ற பெயரால் மழுங்கடித்தல் மிகப் பெரிய குற்றமாகும். சிறுவர் மன நிலையைப் பாதிக்கக்கூடிய - மனக் கசப்பை உண்டு பண்ணவல்ல பாடல்களோ, கதைகளோ இருந்தால் அவற்றைத் தவிர்க்கலாமேயன்றி மற்றைய ஆக்கங்கள் அனைத்தும் சேர்க்கப்படல் வேண்டியவையே!

நிறைவாக - சிறுவர் இலக்கியக் கர்த்தாக்களை வாழ்த்துவதோடு, இத்துறை மேலும் சிறந்து விளங்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987 - 88ஆம் ஆண்டுகளில்
ஈழத்துப் பல்துறை இலக்கியங்களுள்,

## பயண இலக்கியம்

ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்

ஆய்வாளர் —

அருட். வை. நாகராஜன்

| | |
|---|---|
| **முதற்பார்வை** | |
| நூல்: | **''இலண்டனில் 07 வாரம்''** |
| ஆசிரியர்: | **சிவத்தமிழ்ச் செல்வி, தங்கம்மா அப்பாக்குட்டி** |
| வெளியீடு: | 1988 |

முன்னோட்டம்

இந்நூல், ஒரு பயண இலக்கியம் (Travelogue or Travel Literature) ஆகும்.

இதுவரை, தமிழில் வெளிவந்த ஏறத்தாழ இருநூற்றுக்கு மேற்பட்ட 'பயண இலக்கியம்' நூல் வரிசையில் இந்நூலும் ஒன்றாகிறது.

பயண இலக்கியம், ஒரு புனைவிலி (Non - Fiction) ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக, பயணங்கள் கல்விக்காக - தொழிலுக்காக - ஆய்வுக்காக - உல்லாசத்துக்காக நிகழ்வதுண்டு. பயணி தனது பயணத்திற் காணும் தன்னநுபவங்களைச் சுவைபடத் தொகுத்துக் கட்டுரைக்கும் பொழுது, அப்படைப்பு ஓர் இலக்கியமாகிறது. இது வாசகருக்கு ஒரு பொழுதுபோக்கை அல்லது படிப்பினையை மட்டுமன்றி, பொது அறிவையுந் தருகிறது. குறிப்பாக, புவியியல் - வரலாற்றியல் - சமூகவியல் - மாநுடவியற் கருத்துகளை, இது தருவதுண்டு.

அன்று தொட்டு இன்றுவரை, மனிதன் பயணஞ் செய்கின்றான். அதனால் அவனது வாழ்வில் மாற்றங்களும் முன்னெடுப்புகளும், அபிவிருத்திகளும் உருவாகின்றன. இதன் பேறாக, அவனது நாகரிகம் வளர்ந்திருக்கிறது - வளர்கிறது.

முன்னாளில், பயணம் சிரமம் மிக்கதாயிருந்தது. திரும்பி வரமுடியாத பயணங்களும் இருந்தன. இருந்தும், தேவை - ஆர்வங் காரணமாக மக்கள் பயணஞ் செய்தனர். பிளினி, பெரிப்புரூஸ், யுவான் சுவான், மார்க்கப் போலோ, பாகியன் போன்ற பயணிகள் செய்த பயணங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன. இன்றைய அறிவியல் வளர்ச்சி - பயணங்களைச் சுலபமாக்கி, அவற்றை விரைவுப் பயணமாகத் தருகின்றது.

**தமிழ் இலக்கியங்களிற் பயணம்**

தமிழ் இலக்கியங்களிற் பயணம் பற்றிப் பரக்கக் காணலாம். தொல்காப்பியத்தில், அறம் - பொருள் - தூது - ஓதல் - பகை - பிரிவு எனும் பல்வகை நிலைகளில், இதன் கூறுகளும் இயல்புகளும் பற்றிக் காணலாம். சங்க இலக்கியங்களிற் கூட, பொருள்வயிற் பிரிந்த தலைவன் - வரைவிடைப் பிரிந்த தலைவன் - போர் புரியப் புறப்பட்ட தலைவன் - உடன்போக்கு நிலையிற் சென்ற மகளிர் போன்றோர் மூலமாகப் பயணங்கள் பற்றிய தகவல்களைக் காணலாம். பெருங்கதை - சிலப்பதிகாரம் - மணிமேகலை - சிந்தாமணி போன்ற பெருங் காப்பியங்கள் பயண எண்ணங்களைச் சுவையுற இலக்கியமாகத் தருகின்றன. கம்பனும் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக் கூறுகிறார். பாரதமும் வனவாசம் போன்ற சருக்கங்களிலும், படலங்களிலும் செய்திகள் தருகிறது. உலா - தூது போன்ற சிற்றிலக்கியங்களும் பயண இலக்கியம் தருகின்றன. நாயன்மார் - ஆழ்வார்களின் சமய இலக்கியங்களும் இது பற்றிக் கூறுகின்றன. குறிப்பாக, சமய மெய்யடியார்கள் தமது ஆலய தரிசனங்கள் மூலம் பயண இலக்கியம் தந்திருக்கின்றனர்.

1989, அக்டோபரில் கலை இலக்கியக் களத்தினர்—தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் 87-88களில் ஈழத்தில் வெளியான நூல்களின் திறனாய்வை, இருநாள் கருத்தரங்குகளில் வெகு சிறப்பாக நடத்தினர். அவற்றுள், ஓரரங்கில் திரு. 'அநு. வை. நா.' குறிப்பிட்ட காலப் பகுதியில் வெளியான பல்துறை இலக்கிய நூல்கள் பற்றித் திறனாய்வு செய்தார்.

அவரது ஆய்வு -

:: சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
'இலண்டனில் 07 வாரம்''

:: கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்களின்
''இடப்பெயர் ஆய்வு''

:: திரு. 'டொமினிக் ஜீவா' அவர்களின்
''தூண்டில்''

:: திரு. கோப்பாய் சிவம் அவர்களின்
''நொடியும் விடையும்''

:: திரு. சச்சி மாஸ்ரர் அவர்களின்
''மக்கள் வாழ்வில் பழமொழி''

எனும் ஐந்து நூல்கள் பற்றித் தொட்டு நிற்கிறது. அவற்றுள், இவரது முதற் பார்வை—''இலண்டனில் 07 வாரம்'' என்ற நூலில் இலயித்தது.

அதன் சிறப்புப் பயன் கருதி, அன்னாரது இம் மணிவிழா ஏட்டில் அதனை மீள்பதிவு செய்கிறோம்.

—கலை இலக்கியக் களத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியத்தில், 'ஆற்றுப்படை' இலக்கியமே பயண இலக்கியத்தின் ஒரு வீரியமான விதை எனலாம். மறைந்த தமிழ் நூல்களான. 'தகடூர் யாத்திரை' 'செங்கோடன் தரைச் செலவு' போன்ற நூல்கள் பயணம் பற்றிய எண்ணத்தைத் தந்திருக்கின்றன. 'பத்துப்பாட்டில்' 'ஆற்றுப்படை' பற்றிக் கூறப்படு கிறது. தொல்காப்பியத்திலும் - இதற்கான கொள்கை விளக்கம் ஒன்றினை —

''பெற்றப் பெருவளத்தினைப் பெறாஅர்க்கு;
அறிவுறுத்தீச் சென்று,

பயனெதிரச் சொன்ன பக்கம்''
- தொல். பொருள்: புறத் - 30)

எனக் காணுகிறோம்.

நவீன இலக்கியங்களிற் பயணம்

இவ்விலக்கிய முயற்சி 19ம் நூற்றாண்டின் பிற் பகுதியில் மேனாட்டாரின் வருகையோடு துரித வளர்ச்சி கொண்டது. இதற்கிடையில், 1889 ல் திரு. சேலம்பகதுல நரசிம்கல நாயுடு அவர்களின் 'ஸ்ரீ ஆரிய திவ்விய தேச யாத்திரைச் சரித்திரம்' எனும் பயண நூல், முதன் முதலாக தமிழில் அச்சு வாகனமேறி வெளி வந்தது. இதுவே நாம் அறிந்த வகையில் - தமிழில் வெளிவந்த - ஓரளவு முழுமையான பயண நூல் என ஆய்வாளர் கருதுகின்றனர். இவரையடுத்து இந் நூற்றாண்டில் - ஏ. கே. செட்டியார், 'சோமலெ' போன்ற பேரறிஞர்கள் இவ்விலக்கியத் துறையில் அதி ஈடுபாடு கொண்டனர். ஆரம்பத்தில், சிறு துணுக்கு களாகவும், சிறு கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும் வந்த இத்துறை, - இன்று பல்கிப் பெருகி இருக்கிறது.

இன்று - திருமதி ஞானம் புட்பம் என்பவர், தனது கலாநிதிப் பட்டத்துக்கு இத்துறையினை ஆய்ந்து நூல் எழுதுமளவுக்கு இது விரிந்து, வளர்ந்து நிற்கிறது.

இன்றைய பயண இலக்கியங்கள், பொதுவாக வாசகர் கருத்தையும், கவனத்தையுங் கவரும் வகையில், எழுதுவனவாக இருந்த போதிலும், அவை சமுதாய நலன் - குழந்தைகள் நலன் - மாணவர் நலன் கருதி எழுதப்படுவனவாக இருப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலின், பக்தி - காட்சி காணல் - பத்திரிகைத் தூது - ஆய்வு - கல்வி - உல்லாசம் - அழைப்பு போன்ற பல நோக்கங்களை முன்வைத்தே இவை எழுகின்றன. இதற்கென ஒரு வடிவமைப்பும் உண்டு. பெரும்பாலும் இவை, கட்டுரை வடிவிலேயே அமைவதுண்டு. உரையாடல் வடிவிலும் சிலர் எழுதுவதுண்டு. (எ+கு : 'சோமலெ' யின் 'லண்டனில் லூாசி') கண்ணதாசன், ஏ. எம். பரமசிவானந்தம், 'சோமலெ', டாக்டர் மு. வ. என்போர் கடித வடிவிலும் தமது பயண நூல்களை எழுதியிருக்கின்றனர். வ. மு. சேதுராமன் போன்றோர், இதனைக் கவிதை வடிவில் வடித்திருக்கிறார்கள். (நூல்: 'மலை நாட்டின் மீதினிலே'). நாட்டார் இலக்கிய அமைப்பிலும் இதனை, 'வழி நடைச் சிந்து', 'வழி நடைக் கும்மி', 'யாத்திரைக் கும்மி', 'யாத்திரைச் சிந்து' என்ற வடிவிலுங் காணலாம்.

பயண இலக்கியப் படைப்பாளிகள் தமது பயண நோக்கை முன்வைத்து, பல உத்திகளைக் கையாண்டு எழுதுவதுமுண்டு

பக்தி நோக்கங் கொண்ட பயண இலக்கிய வரிசையில், தெ. மு. பாஸ்கரத் தொண்டமான் ('வேங்கடம் முதல் குமரி வரை') சோ. சிவபாதசுந்தரம் (மாணிக்க வாசகர் அடிச்சுவட்டில்') பரணீதரன் போன்றோர் மிகச் சிறப்பான பயண நூல்களைத் தந்திருக்கிறார்கள். இத்துறையில் இன்று, புதிய மவுசுடனும், மலர்ச்சியுடனும் எழுதியவர் - எழுதுபவர் 'மணியன்'. இவரது 'இதயம் பேசுகிறது' எனும் சிற்றிதழின் பெயரே இவரது பயண நோக்கிற் பிறந்ததாகும்.

இத்துறைக்கு, மொழிநடை மிகவும் முக்கியம். எல்லோரும் படித்து விளங்கக் கூடிய கருத்தும் தெளிவும் உடையதாக இஃதமைதல் வேண்டும்.

உவமான - உவமேயங்களைச் செறிவு படுத்தி எழுதுபவர்களில், முதற்பயண நூலாசிரியர், நாயுடு அவர்கள் முன்னிற்கிறார். மு. வ. வின் நடை எளிமையுடன் கருத்துக்களைச் சொல்லுகிறது. 'ம. பொ. சி. யின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையில் இலக்கியச் சுவை காணப்படுகிறது. 'கல்கி யின் நடை, நகைச்சுவையுடையது. 'மணியன்'' 'சிவசங்கரி', 'லக்ஷ்மி' போன்றோர் நாவல் நடையில் எழுதுகிறார்கள். பாணீதரன், பாஸ்கரத் தொண்டமான், சோ. சிவபாதசுந்தரம் போன்றோர் பக்திச் சுவையுங் கலையுணர்வுந் தருகிறார்கள். இவர்களது நூல்கள் இயற்கையழகு, வருணனை என்பனவற்றை இழையோட விட்டு நெஞ்சை அள்ளுபவையாக இருக்கின்றன.

எந்தவொரு பயண இலக்கியமும் வாசகரை மனதிற் கொண்டே எழுதப்படல் வேண்டும்.
இதற்காகவே —

''கூர்ந்து கவனித்தல்; ஆர்வத்துடன் நினைவு கொள்ளுதல்; வருணித்துக் காட்டுதல்; சோர்வின்றி விளக்குதல் ஆகிய திறமை உடையோரே பயண நூல்களைப் பயனுள்ள வகையில் வழங்கிடலாம்.........

என்று ஓரிடத்தில் திரு. அன்பழகன் கூறுவது, ஈண்டு ஆழ நோக்குதற்கு உரியதாகும்.

நூலுக்குள்— பயண நோக்கம்

மேற்குறித்த நோக்கில் — செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ''இலண்டனில் 07 வாரம்'' என்ற இந்நூலை நோக்குவதே எனது கண்ணோட்டத்தின் முதன்னிலை நோக்காகும்.

செல்வி அவர்களின் 'பயண நோக்கம்' என்ன என்பதை அவருடைய 'ஒரு வார்த்தை' - 'அழைப்பு' எனுந் தலைப்புகளில், தெட்டத் தெளிவாக அவரே தருகிறார்.

''கீழைத் தேச நாடுகளிற் சமயச் சொற்பொழிவு ஆற்றி ஆற்றிப் பெற்ற அநுபவம் எனக்கு மேலை நாட்டுச் சொற்பொழிவுப் பயணமும் இன்றியமையாதது என்ற எண்ணத்தை ஊட்டியது.

(பக். 04 - 05)''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார். அதாவது, இவரது நோக்கம் - சமயச் சொற்பொழிவுகள் மூலம் மேலை நாடுகளில் உலா வருவதேயாகும். இவ்வுலா ஓர் உல்லாசப் பயணமாக - இலண்டன் வாழ் தமிழ்ச் சைவ அடியார்களின் நட்பின் பேரால் அழைக்கப்பெற்று ஓர் இன்பவுலா வாக அமைகிறது. இதற்கிணங்க - 18-04-87 முதல் 28-04-87 வரையிலான நாள்களில் இவர் இலண்டனைக் கண்டு - உய்த்து - உணர்ந்த அநுபவங்களை நூல் வடிவில் தந்திருக்கிறார். இலண்டன் உயர் வாசற் குன்று முருகன் ஆலயம் - விம்பிள்டன் பிள்ளையார் கோயில் - ஈஸ்ற்கம் முருகன் கோயில் ஆகிய ஆலயங்களிலும்; இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம், ஸ்ரீ ஞானானந்த சமாஜம், மேற்கு இலண்டன் தமிழ்ச் சங்கம், கிழக்கு இலண்டன் தமிழ்ச் சங்கம், பிரித்தானிய இந்து ஆலய தர்ம பரிபாலனம் போன்ற நிறுவனங்களினதும் ஒரு விருந்தினராகச் சென்ற நூலாசிரியை அவர்கள், அங்குள்ள சைவ - தமிழ் மக்களின் மனதில், தமிழையும் சமய (சைவ) நூற் கருத்துகளையும் தனது 'வெள்ளி நாவால்' வழங்கி, பொன்னாடை - பட்டாடை - மலர்மாலை - பொற்பதக்கம்-பொற்கிளி என்பனவற்றுடன் 'சைவத் தமிழ்ப் பூஷணம்' எனுங் கௌரவ விருதினையும் பெற்று வந்திருக்கிறார்கள்.

நீண்ட காலமாகப் பிரிந்திருக்கும் ஓர் உறவினரைச் சந்திக்கச் சென்ற ஓர் உறவினரின் பயணமாக இது விளங்குகிறது. ஆதலின், இப்பயணம் ஒருவரின் சுய வுறவுப் பயணம் போலிருக்கிறது. அதாவது - ஈழத்திலிருந்து இலண்டன் சென்று வாழும் சைவ மக்களைச் சந்திக்கச் சென்ற ஒரு பயணமாகவே இஃதமைகிறது.

ஆயினும், இப்பயணத்தின் நோக்கம் - பக்தியின் பாற்படுகிறது. பரணீதரன், பாஸ்கரத் தொண்டமான் போன்றோரின் பக்திப் பயணமாக இஃதமையாது, தன்னின உறவின் பக்திப் பயணமாக அமைகிறது.

கடல் கடந்து சென்று வாழும் எமது மக்களிற் பலர் இன்றும் தாம் பிறந்த மண்ணின் கலை - கலாசாரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டினையும் சமய ஒழுக்கங்களையும் நழுவ விடாது பேணுகிறார்கள் என்ற உண்மையை நூலாசிரியர் நேரிற் கண்டு அநுபவித்ததை இங்கு கூறுகிறார். குறிப்பாக - இவர் சந்தித்த சைவத் தமிழன்பர்கள் பலர் சைவ உணவையே உண்கிறார்கள் என்றும்; சைவாசாரத் திருமணங்கள் செய்கிறார்கள் என்றும்; வேத - ஆகம சாஸ்திரங்களை ஓதி உணர்கிறார்கள் என்றும்; சமஸ்கிருத மந்திரங்களுடன் தமிழ்த் தோத்திரங்களையுஞ் சொல்லுகிறார்கள் என்றும்; விருந்தோம்பும் பண்பிற் சிறந்து விளங்குகிறார்கள் என்றும் பல தகவல்களைத் தருகிறார்.

இந்த இடத்தில், அங்குள்ள ஈழத்தமிழர் பலரின் நாவில் எந்நேரமும் ஆங்கிலமே தவழ்கிறது என்றும்; வீட்டில் தம் பிள்ளைகளுடன் கூட ஆங்கிலத்தையே தாய் மொழி போற் பேசுகிறார்கள் என்றுங் கூறுகிறார். இதற்கிடையே, அங்கு ஒரே ஒரு தமிழ்க் குடும்பத்தில் மட்டும் தமிழைத் தவிர வேறு எந்த மொழியையுங் கேட்க முடியாது என்ற ஒரு தகவலையுந் தந்து மகிழ்கிறார். (பக்: 36)

சமயப் பிரசாரம்

இந்நூல் ஒரு சமயப் பிரசாரகரின் பயண நூலாதலால், நூலின் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும், சமய நோக்கும், சமயப் பிரசாரமுமே மேலோங்கி நிற்கின்றன. இங்காற்றிய சமயச் சொற்பொழிவுகளில், சமயவொழுக்கங்கள் – வேத, ஆகம, திருமுறை நூல்களின் கருத்துகள் - புராண, இதிகாசக் கதைகள், அடியார்களின் கூட்டு வழிபாடுகள் - சத்சங்கச் சங்கமங்கள் என்பன பற்றிச் சுருக்கமாகவும் தெளிவாகவுங் காணலாம்.

காட்சி வர்ணனை

இதே வேளையில், ஆசிரியை அவர்கள் – அங்கு தான் கண்ட காட்சிகள் பற்றியும் ஆங்காங்கே சுவைபடத் தருகிறார். எலிசபெத் மகாராணி பொருள் கொள்வனவு செய்யும் இலண்டன் ஒக்ஸ்போர்ட் வீதிக் கடைகளின் தரிசனம் - நிலவடிக் கீழோடும் புகையிரத சேவை (Tube Train Service) கேம்பிறிஜ் பல்கலைக் கழக தரிசனம் – அங்குள்ள மோட்டர் பாதை (motor way) - கலைக் கோயில் போன்ற இன்னோரன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிகளை வருணனையுடன் தன் இயல்பான சொல் வண்ணம் இழையோட, விட்டிருக்கிறார்கள். எடுத்துக் காட்டுக்கு இங்கு ஒரு பந்தியை நோக்கலாம்—

> ''கேம்பிறிஜ் பல்கலைக் கழகம் எடுத்த எடுப் பிலேயே அழகான ஒரு கலைக்கோயிலாக கண் களையும் கருத்தையும் கவர்ந்தது. கடந்த கால நினைவுகள் அலை அலையாக எழுந்தோங்கி உள்ளத்தைச் சிலிர்க்க வைத்தன. பழைய பாரம் பரியத்தை அழியவிடாது, பேணிக்காக்கும் மரபினை இங்கு கண்டேன். இடையிடையே அழகான நந்தவனங்கள், அழகுக்கு மென்மேலும் மெருகூட்டிக் கொண்டிருந்தன. இக்கலைக் கோயில் ஒரு கவின் பூங்காகவும் காட்சியளித்தது. சலசல என்றோடும் சிற்றாறுகள் இக் கலைக் கோயிலின் பெருமையை ஒலித்துக் கொண்டிருப்பது போல் ஓர் இன்பத்தை ஊட்டின ——'') (பக்: 24—25)

நூலமைப்பு

இந்நூலின் அமைப்பிலும், நூலாசிரியையின் ஒரு திட்டமிட்ட வடிவத்தைக் காணக் கூடியதாக இருக்கிறது. அடக்கமான அளவு - இதழ்களுக்கு இடையே தன் நினைவு மிக்க ஒளிப்படங்கள் - என் பவற்றுடன், தன் எழுத்தை நாட்குறிப்பேடு (Diary) களாகப் புரட்டிப் புரட்டிப் பார்க்கும் வகையில், இதனை தந்திருப்பது ஓர் இனிய உத்தியாகத் தெரி கிறது. ஆசிரியையின் மொழிநடை தெளிந்த நீரோடை போல் - ஆற்றொழுக்கான சொற்பொழிவு நடையில் அமைந்திருக்கிறது. இதில், கட்டுரைப் பாங்கிலும் சொற்பொழிவுப் பாங்கே மேலோங்கி நிற்கிறது.

நூலின் பயன்பாடு

ஒரு நூலின் நோக்கம் - வெளிப்பாடு - பயன்பாடு எனும் முத்திற நோக்கில், இந்நூலை நோக்கும்போது, இதன் இறுதி அத்தியாயமான 'நினைவு அலைகள்', வாசகர் நெஞ்சில் என்றும் நிலைக்கும். நூற் பயன் பாட்டையும் ஆசிரியை தந்திருப்பது இந்நூலின் சிறப்பைத் தருகிறது. இவ்வத்தியாயத்தில் ஆசிரியர் தரும், தன்னநுபவ முத்திரைகள் யாவும் தன் பயணத்தின் மந்திரங்களாகவே இருக்கின்றன. எல்லாம் ஆன்ம தத்துவங்கள் (Spritual Phylo-sophy) ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில், ஆசிரியை எமது மண்ணை 'ஞானப் பூங்கா' என்றும் மேலை மண்ணை அறிவுப் பூங்கா என்றும் நினைவு கொண்டு பல அரிய தத்துவங் களையும் கருத்துகளையுஞ் சுட்டுகிறார். இங்கு இவர், எமது கீழைத்தேயத்து அருட்பாதையின் ஒளியையும் தெளிவுபடுத்துகிறார்.

"நிலையற்ற உலகத்தில் அழியும் பொருள்களில் ஆக்கங் காணும் மேலை நாட்டு விஞ்ஞானக் கொள்கையை விட, அழியாத மெய்ப் பொருளைக் காணும் மெய்ஞ்ஞானமே பிறவிப் பயனை நிறை வேற்ற வல்லது என்பது எம்மவர் கொள்கை."

"பரத்தை மறைக்கும் பார்முதற் பூதங்கள் மேலை நாட்டில் பெருஞ் சக்தியாக உருவெடுத்துப் பற்றுகளை வளர்க்கும் அழிவுப் பொருள்களை ஆக்கிக் கொண்டிருக்கின்றன. இதனால், அங்கு இன்பமும் பயங்கரமுங் குடிகொண்டிருக்கின்றன.

"கீழை நாட்டில், பார்முதற் பூதங்கள் பரத்தில் மறைந்து நிற்க - அழியாப் பொருளை அடையத் தவநிலை மேற்கொள்ளப்படுகிறது. அது நிலைக்க வேத - ஆகம - புராண - இதிகாசங்களும் நோன் புகளும் மெஞ்ஞானத்தை விளக்கும் வகையிற் பெருகிக் கொண்டிருக்கின்றன. அன்புநெறி தழைக்கிறது. ஆண்டவன் சேவடியில் நிற்கிறோம் என்ற உணர்ச்சி ஏற்படுகிறது. பற்றுகள் தாமா கவே நீங்குகின்றன ......"

என்று கூறும் அவர் வார்த்தைகளில், அவருடைய ஆன்மீக நோக்குங் கருத்தும் பளிச்சிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலாசிரியர், தன் நூல்மூலம் தனது பயணம் எப்படி இருந்தது - எப்படிப் பயன் தந்தது என்பதையும் -

> ''நான் தங்கியிருந்த இந்த ஞானப் பூங்காவில் சிவமணங் கமழும் ஞான மலர்களையே தூவினேன் - சூடினேன் - நுகர்ந்தேன் - ஆனந்த நிலை அடைந்தேன்... ''

என்று கூறி முடிக்கிறார்.


ஒரு பயண இலக்கியத்தின் முழுமையை இந்நூலில் முழுமையாகக் காணமுடியவில்லை. ஆயினும், இதில் ஆசிரியையின் சுயதமிழ் - சைவ நோக்குகளையும் - சுய அநுபவக் கருத்துகளையும். சுய ஆன்மீகவுணர்வுகளையும் நிறையக் காணமுடிகிறது. ▭





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org